## தந்தையின் நண்பரும், தனது வழிகாட்டியுமான

# கழக முன்னோடியை தேடிச் சென்று வாழ்த்துப் பெற்ற தங்கம் தென்னரசு!

விருதுநகர், ஏப். 13 -

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி.செட்டிகுளம் பகுதியில் திமுக பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடியான சக்கரை என்பவரை திருச்சுழி திமுக வேட்பாளர் தங்கம் தென்னரசு தேடிச் சென்று வாழ்த்து பெற்றார். டி.செட்டிகுளத்தைச் சேர்ந்த சக்கரை, குறிஞ்சாக்குளம் கிளைச் செயலாளராகப் பணியாற்றியவர். தி.மு.க.வின் மூத்த தலைவர்களான தங்கப்பாண்டியன், எஸ்.எம்.போஸ், பால்சாமி உள்ளிட்டோருடன் நெருக்கமான நட்பு பாராட்டியவர்.

கடந்த மூன்று முறை மட்டுமல்ல, எப்போதும் தங்கம் தென்னரசுதான் எங்கள் சட்டமன்ற உறுப்பினர் என்கிறார் கழக முன்னோடியான சக்கரை. தொடர்ந்து பேசிய சக்கரை, 1970களில் ஆசிரியர் தங்கப்பாண்டியன் எங்களுக்கு அரசியல் வகுப்பு எடுக்க ஊர் ஊராக வருவார். இளைஞர்களை ஒன்றுதிரட்டி திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகளை எடுத்துரைப்பார். அந்தக் காலத்தில் எம்ஜிஆர் கொடி கட்டிப் பறந்த அருப்புக்கோட்டைத் தொகுதியில் திமுகவை வளர்த்தெடுத்தவர் தங்கப் பாண்டியன்தான்.

முன்னதாக, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் அருப்புக்கோட்டை அண்ணா நகரில் நடைபெற்ற போராட்டத்தில் பால்சாமி, துரைக்கண்ணு, இருளாண்டி, ராமசாமி, எஸ்.எம்.போஸ் உள்ளிட்டோருடன் நானும் கைதானேன். ஆனால் தங்கப்பாண்டியன் நீ சிறைக்கு வரவேண்டாம், உனது குடும்பத்தை பார்த்துக்கொள் எனக் கூறி என்னை விடுவிக்க வைத்தார்.

இந்நிலையில் விருதுநகர் நீதிமன்றத்துக்கு தங்கப்பாண்டியன் வரும்போது, சிறுவனான தங்கம் தென்னரசு சாப்பாட்டுக் கூடையைத் தூக்கிக் கொண்டு என்னுடன் வருவார். நானும் தங்கம் தென்னரசுவும் ஒன்றாக மல்லாங்கிணறிலிருந்து விருதுநகர் செல்வோம். ஏழு வயது சிறுவனான தங்கம் தென்னரசு அப்பாவை காண வேண்டி அம்மாவிடம் இருந்து வாங்கிகொண்டு வந்த தூக்குவாளியை யார் கையிலும் தராமல் தனது மடியிலேயே வைத்து கொண்டு வருவார். அப்பாவை பார்த்தும் ஓடிச் சென்று ஒட்டிக்கொள்பவர், அவர் சாப்பிட்டு விட்டு சென்ற பின்னர் தான் அங்கிருந்து கிளம்பு வேன் என அடம்பிடிப்பார். இப்படியாக அப்பா வின்மீது அளவற்ற பிரியமும், மரியாதையும் கொண்டவர். அதனாலேயே இன்றளவும் எங்கு செல்வதற்கு முன்பும் அப்பாவின் நினைவிடத்திற்கு சென்று ஆசிப்பெற்ற பின்னரே செல்வார்.

அவரது தந்தை தங்கபாண்டியன் மறைவிற்குப் பிறகு தங்கம் தென்னரசு போட்டியிடும் போதும் கட்சி கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்வதில் இருந்து, அனைவருக்கும் தகவல் சொல்வது என எல்லாவற்றையும் பார்த்து வந்தேன். ஒரு காலகட்டத்தில் அவர் தகவல் அனுப்பிவிட்டு வீட்டில் இருந்து கிளம்பினால் அவர் மல்லாங்கிணர் வீடு போகும் வரைக்கும் அவருடனே பயணிப்போம்.

சிறு வயதில் இருந்தே எனக்கு தங்கம் தென்னரசுவை நன்றாக தெரியும். அன்று முதல் இன்று வரை தங்கம் தென்னரசுவை நன்கு அறிவேன். அவர் எப்போதும் களத்தில் மக்களோடு ஒன்றிணைந்து, அன்போடு பணியாற்றுபவர். நேற்று எங்கள் பகுதி பிரச்சாரத்திற்கு வந்த போது என்னை தேடி வந்து சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சி. என்னிடம் ஆசிப்பெற்றபோதுதான் கண்டிப்பாக வென்று விட்டு அமைச்சராக மீண்டும் வருவாய் என அன்பு பொங்க வாழ்த்தினேன் என்கிறார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய பகுதிகளில் கிராமமாகச் சென்று பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் மதன்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.


5 ஆம் ஆண்டு நினைவு தினம்

மறைவு: 13.04.2021

எங்கள் அருமைத் தந்தையார், எங்களின் அன்பு தெய்வம்
முன்னாள் – தீமுக தலைமை செயற்குழு உறுப்பினர்,
காரியாபட்டி ஒன்றிய தீமுக செயலாளர், மாவட்ட கவுன்சிலர்

காரியாபட்டி – சித்தனேந்தல்
நினைவில் வாழும் கூ.பால்ச்சாமி அவர்களுக்கு

எங்கள் இதய அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்
உங்கள் நினைவுகளுடன்...

அக்ரி. கணேசன் M.Sc., (Agri) - ருக்மணி கணேசன், M.A., M.Phil., மதுரை
பா.இராஜேந்திரன் - இரா.வசந்தி, சித்தனேந்தல்
பா.ஜெயபெருமாள் - ஜெ.ஜெயா, சித்தனேந்தல்
பா.பொன்னையா I.A.S., - பொ.சினேகலதா B.E.,MBA., சென்னை
மா.முத்துலெட்சுமி – (நினைவில் வாழும்) டாக்டர். மாரியப்பன், காரைக்குடி
ச.சாந்தி நாச்சியார் - மு.சந்திரன், சித்தனேந்தல்

பேரன் பேத்திகள் மற்றும் உற்றார் உறவினர்கள், சித்தனேந்தல்


# களத்தில் இளைஞர் அணி

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.

பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி, திருநெல்வேலி மத்திய மாவட்டம்.

மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் தெற்கு மாவட்டம்.

பழனி சட்டமன்றத் தொகுதி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.

சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, நாமக்கல் கிழக்கு மாவட்டம்.

திருவாரூர் சட்டமன்றத் தொகுதி, திருவாரூர் மாவட்டம்.

இலால்குடி சட்டமன்றத் தொகுதி, திருச்சி மத்திய மாவட்டம்.

இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதி, இராமநாதபுரம் மாவட்டம்.

அவிநாசி சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் வடக்கு மாவட்டம்.

விராலிமலை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்.